**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 522/2023**

**Prosecution witness : அ.சா.10** **Date : 14.07.2025.**

| | |
|---|---|
| **Name : கதிரவன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சந்திரமாக்கடை அருகே குடியிருந்து மளிகைக்கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2023 ம் வருடம் 8 ம் மாதத்தில் ஒரு நாள் மாலை 03.30 மணிக்கு நான் எனது மளிகைக்கடையில் இருந்தபோது இனோவா கார் ஒன்று மேச்சேரியிலிருந்து ஓமலூர் நோக்கி வேகமாக வந்து ஆக்டிவா இருச்சக்கர வாகனம் ஒன்று ஓமலூரிலிருந்து மேச்சேரி சாலையில் சந்திரமாக்கடை பஸ்ஸ்டாப் அருகே புக்கம்பட்டி செல்வதற்காக வாகனத்தை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி கடந்தபோது விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக ஒரு பெண்மணிக்கு இரண்டு கால்கள் துண்டித்து பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வெளியேறி ஆம்புலன்ஸ் மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. கார் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2. இந்த விபத்து யாருடைய தவறால் நடந்தது என்றால் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்த நபர் திடீரென திருப்பியபோது அவருடைய தவறால் நடந்தது.

சம்பவத்தை நான் நேரில் பார்த்ததால் என்னால் உறுதியாக சொல்லமுடியுமா என்றால் முடியும். நான் போலீசார் விசாரித்தோது முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொன்னேன் என்றால் ஆமாம். வேறொரு இருச்சக்கர வாகனம் இந்த விபத்தின் காரணமாக அடிப்பட்டதா என்றால் அவ்வாறு இல்லை. மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**

**மேட்டூர்.**